ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
திகதி 2021 யூன் 07

கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் வங்கித்தொழில் பணிகளை வழங்குதல்

இலங்கை மத்திய வங்கி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொலிஸ் மா அதிபரின் அனுமதியைப் பெற்ற பின், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்ட அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடித்து கொவிட் -19 நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் பயணக் கட்டுப்பாடுகளுக்கமைவாக அத்தியாவசிய வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (உரிமம்பெற்ற வங்கிகள்) ஏற்கனவே வேண்டி கொண்டுள்ளது.

கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் வங்கித்தொழில் பணிகளை வழங்குவது குறித்து உரிமம்பெற்ற வங்கிகளால் வெளியிடப்பட்ட தகவல் தொடர்புகளை/ அறிவிப்புக்களைக் கவனித்து இலங்கை மத்திய வங்கி பின்வருவனவற்றை தெளிவுபடுத்த விரும்புகின்றது.

(i) அத்தியாவசிய வங்கிப் பணிகளான, வணிகத்திற்க்கான நிதியிடல், திறைசேரி செயன்முறைகள், தீர்ப்பனவுப் பணிகளை மற்றும் சம்பளம்/ ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்ற அத்தியாவசிய பணிகளை வழங்குவதற்காகவும் வாடிக்கையாளர்களின் ஏனைய அவசர கோரிக்கைகளை/ தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது;

(ii) ஊழியர்களை வங்கிக் கிளைகளில் பணிக்காக அமர்த்தும் போது அவர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு, வங்கிக் கிளைகளில் வேலைக்கு சமூகமளிக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை கிளைக்கு 15 ஊழியர்கள் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது;

(iii) ஊழியர்கள் சுழற்சி முறையில் வேலைக்கு சமூகமளிப்பது அல்லது குறித்த சில தினங்களில் வாடிக்கையாளர்களின் தேவை கருதி தேவையான கிளைகளை திறந்து வைத்திருக்க வேண்டப்படுகிறது;

(iv) கிளை முகாமையாளர்கள், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலிருந்து வங்கி ஊழியர்களின் போக்குவரத்துக்குத் தேவையான முன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்;

மேலும், உரிமம்பெற்ற வங்கிகள்:

- அத்தியாவசிய வங்கிப் பணிகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பில், பொதுமக்களைத் தெளிவுபடுத்துவதற்காக ஒரு அறிவித்தலை உரிமம்பெற்ற வங்கிகள் பிரசுரிக்க வேண்டப்படுகின்றன;

- இந்த சவாலான காலப்பகுதியில் வங்கிக் கிளைகளைத் தொடர்புகொள்வதற்கான விபரங்களை பல்வேறு விரும்பத்தக்க கொடுக்கல் வாங்கல் மூலங்களை கருத்திற்கொண்டு அவசர தொலைபேசி எண் மற்றும் கிளை ஊழியர்களின் தொடர்பு இலக்கங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தல் உள்ளடங்கலாக அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்படுகின்றன;

- வாடிக்கையாளரின் கேள்விகளுக்கு விடையளித்து பிரச்சினைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு வேண்டப்படுகின்றது ; மற்றும்

- 6100 எண்ணிக்கைக்கும் அதிகமான தன்னியக்க காசு இயந்திரம் (ATM), காசு வைப்பு இயந்திரம் (CDM) மற்றும் நடமாடும் வங்கி ஊர்திகள் உள்ளடங்கலான இலத்திரனியல் /டிஜிட்டல் வழி வங்கிச் சேவைகளை தடையின்றி வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்படுகின்றன.

பொதுமக்கள் இந்த சவாலான காலத்தில் அத்தியாவசிய வங்கிப் பணிகளை மேற்கொள்வதற்காக மாத்திரம் வங்கிக் கிளைகளைத் தொடர்பு கொள்ளுமாறும் ஏனைய அன்றாட வங்கிப் பணி நடவடிக்கைகளுக்காக இயன்றவரையில் இணைய வழிக் கொடுப்பனவுக் கருவிகளைப் பயன்படுத்தி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தமது ஒத்துழைப்பை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கி பொதுமக்களை வேண்டிக்கொள்கிறது.